

# இயேசுவுடன் பயணம்

# முதியோராக...

கிருபாவளன்

# இதோ ! ஊன்றுகோல்...

செபமாலையை உருட்டிக்கொண்டும், செபங்கன செபித்துக் கொண்டும் வாழ்க்கையின் அந்திமக் காலத்த "ஆண்டவரே கதி'' என நாட்களைக் கடத்தும் என் அன் பெற்றோரே! பெரியோரே! உங்கள் செபங்களுக்கு இருக்கு வல்லமையைவிட உங்கள் வலிகளுக்கு, காயங்களுக்கு வேதனைகளுக்கு, துன்பங்களுக்கு வல்லமை அதிகம். அதுவு கிறிஸ்துவின் வேதனைகளோடு அவற்றை இணைத் ஒப்புக்கொடுக்கும் போது அவற்றின் மகத்துவமே மகத்துவம். இ அனுபவம் உங்களுக்கு உண்டா ? இதோ! இயேசு இன்று இந் அனுபவத்தைத் தர ஆசைப்படுகின்றார். எத்தனை முறை நீங்க இந்தச் சிலுவைப் பாதையை செய்திருப்பீர்கள். ஏன், இந் செபங்கள் உங்களுக்கு மனப்பாடமாகவே தெரியும். இன்று நீங்க வழக்கமாய்ச் சொல்லும் அந்த செபங்களுக்குச் சற்று ஓய் கொடுப்போம். மாறாக, இயேசு தாமே உங்களை வழிநடத் ஆசைப்படுகிறார். அவரைப் பின் செல்வோமா!

இயேசு சாவுக்கு தீர்ப்பிடப்பகிறார்.

*முதல் நிலை :*

*இயேசு : பெற்ற பிள்ளைகளாலேயே ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, கைகழுவப்பட்டு, கவலையுறும். உங்கள் வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பிள்ளைகளை பெற்றெடுக்க, பெற்றபின் வளர்த்தெடுக்க, வளர்த்த பின் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க, நீங்கள் பட்ட கஷ்டங்கள், அனுபவித்த துயரங்கள், செய்த தியாகங்கள் எத்தனை எத்தனை! ஆனால் இப்போது அந்தப் பிள்ளைகள் ஒவ்வொருவராய் உங்களை கைகழுவிவிட்டு போகும் போது உங்கள் நெஞ்சமே வெடித்துச் சிதறுவதை என்னால் உணர முடிகிறது. எனது சிலுவைப் பாதையின் முதல் நிலையில், நானும் இப்படிப்பட்ட வேதைனையத்தான் அனுபவித்தேன். அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள, என்னை நெருக்கமாய் அறிந்திராத பிலாத்து கோழைத்தனமாய் கைகழுவியதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் என்னால் நன்மை பெற்றவர்கள், என் அருஞ்செயலால் குணம் அடைந்தவர்கள். என் அருள்மொழியை ஆர்வமாய் கேட்டவர்கள், நான் பலுக்கிய உணவை உண்டவர்கள், அவர்களும் கூட்டத்தோடு கூட்டமாக கைகழுவிவிட்டுப் போனதைத்தான் என்னாலும் ஏற்க முடியவில்லை. என்னை இவர்களும், உங்களை உங்கள் பிள்ளைகளும் கைகழுவியிருக்கலாம். வேறு துணை இல்லாத நேரத்தில் கடவுளின் துணை அருகில் உண்டு. உங்களோடு தான். என்னோடு நீங்கள். நாம் கை கோர்த்தால் இந்த உலகை மீட்க முடியும். புறப்படுங்கள். நம் துன்பத்தால் இந்த உலகின் பாவங்களைப் போக்க.*

*செபம் : என் இறைவா! என்னைவிட்டு வெகு தொலைவில் போய் விடாதேயும். ஏனெனில் துன்புறுகிறேன். அருகிலேயே இரும். ஏனெனில் வேறு துணை யாருமேயில்லை . (சங். 21:11) (தி.பா.22:11)*

# இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது

இரண்டாம் நிலை :

இயேசு : புறக்கணிப்பால் ஏற்பட்ட காயத்தை ஒரு வழியாக சகித்துக்கொண்டு, தைரியத்தையும், தெம்பையும் வருவித்துக்கொண்டு வாழ முற்படும்போது, இந்த உடலை வருத்தும் நோயை வேறு சுமக்க வேண்டியுள்ளதே என முணகும் உங்கள் குரல் எனக்குக் கேட்கிறது. "உடல் நோய்" என்கின்ற சிலுவை உங்கள் மீது சுமத்தப்படும் போது நீங்கள் படும் வேதனை எனக்குப் புதிதல்ல. அவமானம், அநியாயத் தீர்ப்பு அடி, உதை என அடுக்கடுக்காய் துன்பத்தை அனுபவித்த என் மீது பாரச் சிலுவையைச் சுமத்திய போது நானும் நொந்து போனேன். உடல் தெம்பு இருக்கும்போது எதையும் சுமக்க முடியும். தாங்கிக் கொள்ள முடியும். ஏன் உடலை வருத்திக் கொள்ளவும் முடியும். உங்கள் குழந்தைகளின் பாலம் பருவத்தில் அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது அவர்களை விட நீங்கள் அதிகம் வேதனையுறவில்லையா? உண்ணாது, உறங்காது உங்கள் உடலை வருத்தி அவர்களை கவனித்துக் கொள்ளவில்லையா? இப்போது நீங்கள் பலவீனமுற்று நோயென்னும் சிலுவை சுமக்கிறீர்கள். சிலுவையை நான் ஏற்றுக்கொண்டேன். ஏனென்றால் நான் சுமக்கும் சிலுவை மனுக்குலத்தின் பாவங்களின் சுமைகளைப் போக்கும். நீங்கள் சுமக்கும் நோய் என்கிற சிலுவைக்கும் சுத்திகரிக்கும் வல்லமை உண்டு. உங்களில் பாவங்களையும், உங்கள் பிள்ளைகளின் பாவங்களையும் அது தூய்மைப்படுத்தும். கருவிலேயே சுமந்து பழக்கப்பட்ட நீங்கள் இந்த நோய் என்னும் சிலுவையையும் சுமக்கக் கற்றுக்கொள்ளுங்கள் நோயின் போது உங்களைப் பார்த்துக்கொள்ள உங்கள் பிள்ளைகள் அருகில் இல்லாமல் போகலாம். இறைவன் பார்த்துக்கொள்வார். 1

செபம் : ஆண்டவரே! நீர் எல்லாம் பார்க்கிறீர் துன்புறுவோரையும், வேதனைப்படுவோரையும், நீர் கவனித்து கொள்கிறீர். அவர்களை உம்மிடம் ஏற்றுக்கொள்கிறீர். எளியவர் எம்மை உம்மிடம் ஒப்படைக்கிறோம். (சங். 9:34) (தி.பா.10 : 14)

## இயேசு முதல் முறையாக கீழே விழுகிறார்

*மூன்றாம் நிலை :*

*இயேசு : ஓடி ஆடி உழைத்து குடும்பத்தையே நடத்திய நீங்கள் இப்போது உடல் பலவீனத்தால் தள்ளாடுவதை உங்களால் தாங்க முடியவில்லை. வீட்டுக்கு வருவோரை விழுந்து விழுந்து உபசரித்து, பரபரப்பாய் இருந்த உங்களால் நீங்கள் தடுமாறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை . உடல் பலவீனம் உங்களை வருத்துகிறது. நினைத்ததும் எழுந்து விரைந்து சென்று சில காரியங்களைச் செய்ய ஆசைப்படுகிறீர்கள். ஆனால் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுவதற்கே சிரமமாக இருக்கிறது. நீங்கள் முதுமையில் அனுபவிக்கும் இந்த பலவீனத்தை நான் இளமையிலேயே, என் சிலுவைப் பாதையில் அனுபவித்து விட்டேன். ஊர்தோறும் சுற்றித்திரிந்து நற்செய்தி அறிவித்த என்னால் இந்த கடைசிப் பயணத்தை தள்ளாடி, தடுமாறி, விழுந்தும், எழுந்தும் தான் மேற்கொள்ள முடிந்தது. என் உடல் பலவீனப்பட்டதால் சிலுவைப் பயணம் நின்றுவிடவில்லை. நிலைகுலையவில்லை தொடர்ந்தது. உங்கள் பயணமும் தொடரட்டும். உடல் பலவீனம் உங்கள் உள்ளத்தைப் பலவீனமாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறுதி தரும் ஆவி என்னிடம் உண்டு. என்னை உற்று நோக்குங்கள்.*

*செபம் : ஆண்டவரே! எனக்கு வலிமையானவரே! உம்மையே நோக்கியுள்ளேன். ஏனெனில் இறைவா, நீரே என் பாதுகாப்பு அரண். என் இறைவனே ! என் மீது இரங்குவீர்! (சங். 58:9,10)(தி.பா.59 :9,10)*

## இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

*நான்காம் நிலை :*

*இயேசு : சின்னஞ்சிறு வயதில் மம்மி, டாடி என்றும், அம்மா அப்பா என்றும் அழைக்கக் கற்றுக்கொண்ட உங்கள் குழந்தைகள் இப்போது ஒதுங்கிச் செல்கிறார்கள். பாலப் பருவத்தில் பள்ளியில் சேர்ந்ததும் "அப்பா பெயர் என்ன? அப்பாவின் தொழில் என்ன?" என்ற முதல் கேள்விகளுக்குப் பதில் சொன்ன உங்கள் பிள்ளைகள் இப்போது எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும் உலகத்துக்கு நீங்கள் அறிமுகம் செய்து வைத்தவர்கள் இப்போது உங்களை அறிமுகம் செய்து வைப்பதற்கே வெட்கப்படுகிறார்கள். இப்படி பிள்ளைகளாலேயே உதாசீனப்படுத்தப்படுவதை யாரால்தான் பொறுத்துக்கொள்ளமுடியும்? என் தாய்க்கும் எனக்கும் இந்த நிலையில் அந்த வேதனைதான் ஏற்பட்டது. இந்த உலகத்தையே படைத்து அதில் மனிதர்களை அறிமுகம் செய்துவைத்த கடவுளின் மகன் நான். எனது மனித பிறப்புக்கே அறிமுகம் தந்த என் அன்னை . எங்கள் இருவரில் வேதனையையும் சட்டையே செய்யாத நன்றி மறந்த மக்கள் வேதனையாகத்தான் இருந்தது. எங்களுக்கு அருகில் இருப்பதை பெருமையாகக் கருதவேண்டியவர்கள் எங்களை விட்டு ஒதுங்குவதிலேயே குறியாக இருந்தார்கள். வாழ்க்கையில் உயர்த்திவிட்டு உங்களை ஊரறிய, உலகறிய, புகழவேண்டிய உங்கள் பிள்ளைகள் உதாசீனப்படுத்தும்போது அந்த நிந்தனையை ஏற்பது சிரமம்தான். முகம் கவிழ்ந்துதான் போகும். ஆனால் நன்மைத்தனம் நிறைந்த இறைவன் உங்களை நிலைகுலைய விடமாட்டார்.*

*செபம் : ஆண்டவரே! உம்பொருட்டே நான் நிந்தனைதை ஏற்றேன். உம்பொருட்டே வெட்கத்தால் என் முகம் கவிந்துபோயிற்று மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப என் மன்றாட்டை கேட்டருளும். உறுதியான உம் அருட்துணைக்கேற்ப எனக்கு செய் சாயத்தருளும். (சங். 68:7,13) (தி.பா 69:7,13)*

## சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்

ஐந்தாம் நிலை :

இயேசு : நிலாவைக் காட்டியும், பூச்சாண்டி காட்டியும் பாசத்தோடு உணவூட்டிய நாட்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றனவா? அழுது அடம்பிடித்து கேட்ட பொருட்களையும், துணிமணிகளையும், - எப்படியோ பணத்தைப் புரட்டி வாங்கிக் கொடுத்த நேரங்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றனவா? இப்படியெல்லாம் பாசத்தை ஊட்டி வளர்த்த பிள்ளைகள் இப்போது நீங்கள் இருப்பதையே சுமையாகக் கருதுவதும், கடனே என்று உணவை வைத்துவிட்டுச் செல்வதும், உங்களுக்குத் தேவையான பொருட்களை உங்கள் முன் போட்டுவிட்டுச் செல்வதும் நிச்சயம் வேதனையாகத்தான் இருக்கும். வேண்டா வெறுப்புடன் அவர்கள் - தரும் உணவோ, உடையோ, பொருளோ உங்கள் உள்ளத்தை உடைக்கும். ஆனால் அதை வேண்டாம் என்று சொல்லவும் முடியாது. ஏனென்றால் அவை முதுமையில் உங்கள் அத்தியாவசியத் தேவைகள். உங்களால் சுலபமாகப் பெறமுடியாதவை. கூனிக்குறுகிப் போகிறீர்கள். ஏறக்குறைய இதே வேதனையைத் தான் நானும் அனுபவித்தேன். கட்டாயப்படுத்தப்பட்டதால் வேண்டா வெறுப்புடன் உதவி செய்த சீமோனின் துணையை என்னால் புறக்கணிக்கவும் முடியவில்லை. மகிழ்ச்சியோடு ஏற்கவும் முடியவில்லை . வேறு வழியில்லாமல் அவர் உதவுகிறார். நானும் ஏற்றுக் கொள்கிறேன். உரிய மரியாதையோ, பாசமோயின்றி உங்களுக்குத் தரப்படும் உணவையோ, உடையையோ பெற்றுக்கொள்ளும் போது உங்கள் மனம் படாத பாடுபடும். ஆனால் பிரதிபலன் பார்க்காது துணைபுரிய இறைவனைத் தவிர வேறு மனிதர்களைப் பார்ப்பது அரிது.

செபம் : ஆண்டவரே! எனக்குத் துணை செய்யும். மனிதன் மீது நம்பிக்கை வைப்பதை விட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம். என்னைத் தள்ளினார்கள். விழத்தாட்டப் பார்த்தார்கள். ஆனால் ஆண்டவர் எனக்குத் துணை செய்தார். (சங். 117:8,13) திபா. 118 : 8, 13)

## வெரோணிக்காள் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறார்

*ஆறாம் நிலை :*

*இயேசு : வளர்ந்த உங்கள் பிள்ளைகள் குழந்தைகளாட இருந்தபோது, நடந்தவையெல்லாம் உங்கள் கனத்த இதயத்தை மேலு கனமாக்குகின்றன. அவர்கள் உணவருந்தும்போது உதடுகளின் ஓரத்தில் சிதறிய பருக்கைகளை துடைத்து, அவர்கள் கை, கால்களை கழுவி, ஏசு அவர்களைக் குளிப்பாட்டிவிட்டும் வளர்த்தவர்கள் நீங்கள். இன் முதுமையின் கொடுமையால் படுத்த படுக்கையாகிவிட்டீர்கள். நடமாட முடியவில்லை. உழைக்க முடியவில்லை. கண்கள் தெளிவாகர் தெரிவதில்லை. காதுகள் சரியாகக் கேட்பதில்லை. எதற்கெடுத்தாலு மற்றவர்களுடைய உதவி தேவைப்படுகிறது. இவையெ பரவாயில்லை. ஆனால் இயற்கையின் அழைப்புக்குக் கூட உங்களம் ஈடு கொடுக்க முடியாமல், படுக்கையிலேயே நீங்கள் சில தேவைகளை பூர்த்தி செய்ய நேரிடுகிறது. மற்றவர்கள் வந்து அந்த இடத்தையும் உங்களையும் சுத்தப்படுத்த வேண்டியுள்ளது. அப்போது நீங்கள் படு வேதனை, உங்கள் உள்ளம் சிறுத்துப்போவது எனக்குப் புரிகிறது இவற்றைக் கூட நம்மால் செய்ய முடியவில்லையே என கலங்கி போகிறீர்கள். சிலுவைப்பாதையின் போது சிந்திய இரத்தக் கசிவையும் ஓடிய வியர்வையையும் துடைத்துக்கொள்ளக்கூட என்னால் முடியவில்லை. வெரோணிக்காவின் பாசக்கரம் தேவைப்பட்டது. அவளும் அன்புக்கரத்தை நீட்டினாள். அவளிடம் என் சாயலை நாம் பார்த்தேன். அதற்கு கைம்மாறாக அந்தத் துகிலில் என் முகத்தை - பதித்தேன். உங்கள் இயலாமையில் உங்கள் பிள்ளைக் பங்கெடுக்கிறபோது, மகிழுங்கள், நன்றி சொல்லுங்கள். உங்கள் சாயல் தானே அவர்கள். இதில் வெட்கப்படுவதற்கென்ன உள்ளது . அவர்களுக்கு நீங்கள் ஒரு கைம்மாறு செய்யமுடியும். இறைவனி திருமுக ஒளி அவர்கள் மேல் வீச செபியுங்கள்.*

*செபம் : ஆண்டவரே! எங்கள் பக்கமாய் உமது முகத்தை திருப்பும். ஆண்டவரே! உம் முகத்தின் ஒளி எம்மீது வீசச்செய்யும் (சங். 4:6) (தி.பா. 4:6 )*

# இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

ஏழாம் நிலை :

இயேசு : எதையுமே பொறுத்துக் கொண்டும், தாங்கிக்கொண்டும் வாழப் பழகிவிட்ட உங்களாலேயே சில நேரங்களில் தாங்கமுடியாத வலி, சகிக்க முடியாத வேதனை, உடலை வாட்டும் நோய் வரும்போது பொறுத்துக்கொள்ள முடியாமல் துடிக்கிறீர்கள். உங்களுக்கு ஆதரவாக இருக்கவும், மருத்துவரிடம் அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கவும், தேவைப்பட்டால் தைலம் தேய்த்து, ஒத்தடம் கொடுக்கவும் உங்கள் பிள்ளைகள் முன்வரமாட்டார்களா என ஏங்குவீர்கள். அப்போது அவர்கள் ஆறுதல் தருவதற்குப் பதிலாக "வயசான காலத்தில் இதெல்லாம் அனுபவிச்சுத்தான் ஆகணும். ஏன் இந்தப்பாடுப்படுத்துறீங்க, கொஞ்சம் பொறுத்துக்க வேண்டியதுதானே" என பொறுமித் தள்ளுகிற போது உங்கள் வேதனைக்கு அளவே இருக்காது. இத்தனை பிள்ளைகள் இருந்தும், இத்தனை உறவுகள் இருந்தும், தேவையான பொருள் வசதி இருந்தும், உதவி செய்ய மனம் இல்லையே என நினைக்கும்போது, உங்கள் உடல் வலியைக் கூட எப்படியோ பொறுத்துக் கொள்வீர்கள். ஆனால் இந்த மனக் காயத்தைத் தாங்கவே முடியாது. நானும் இதே வேதனையைத்தான் அனுபவித்தேன். சுமக்க முடியாத சிலுவையை சுமந்து வந்து தள்ளாடி விழுந்த என்னைத் தாங்கிப் பிடிக்க, அத்தனைபேர் இருந்தும் ஒருவரும் முன்வராதபோது, நானும் இதே வேதனையைத்தான் அனுபவித்தேன். தள்ளாடும் நேரத்தில், தயங்காது துணைபுரியும் ஆண்டவரின் அருள் நம்மை நிச்சயம் தாங்கும்.

செபம் : "இதோ என் நடை தள்ளாடுகிறது" என்று நான் நினைக்கையில் ஆண்டவரே உம் அருள் என்னைத் தாங்குகிறது. என் இதயத்தில் கவலைகள் மிகும் வேளையில், உமது ஆறுதல் என் ஆன்மாவை இன்பத்தில் ஆழ்த்துகிறது. *(சங். 93:18,19)* தி.பா. *94:18, 19)*

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

எட்டாம் நிலை :

இயேசு : உங்கள் பேரப்பிள்ளைகளை உங்கள் பிள்ளைகள் வளர்க்கும் விதம் உங்களை எப்படி குமுறவைக்கிறது! "இப்பம் நடந்துகொள்ளாதீர்கள், நல்வழிப்படுத்துங்கள். நல்ல விஷயங்களை சொல்லிக் கொடுங்கள். தெய்வ பயத்தில் வளர கற்றுக்கொடுங்கள்' என்று நீங்கள் அறிவுரை கூற வந்தால் உங்களுக்கு கிடைக்கும் பதில் என்ன? 'பேசாம உங்க வேலையைப் பார்த்துகிட்டு போங்க. உங்களுக்கு ஒன்னும் தெரியாது. இந்தக் காலத்து மனுஷங்க நாங்க. உங்கள் வேதாந்தம் எல்லாம் இப்ப சரிபடாது" என்று ஒதுக்குவதோடு நிற்பதில்லை. "சாமி, கோயில், பயம், பக்தின்னு வாழ்ந்த நீங்க இப்போ நல்லாவா இருக்கீங்க. அவங்களைப் பாருங்கள். எவ்வளவு விவேகமாக வாழ்ந்து வயசான காலத்திலேயும் பிள்ளைகளுக்குப் பிரயோஜனமாக இருக்காங்க" என்று அலுத்துக் கொள்ளவும் செய்வார்கள். உங்களுக்காக அவர்கள் இரங்குவார்கள். அவர்களை நினைத்து நீங்கள் அழுவீர்கள் எனது சிலுவைப் பாதையில் நிகழ்ந்ததும் இதுதான். அவர்களுக்காகவும் அவர்கள் பிள்ளைகளுக்காகவும், அவர்களது பாவங்களுக்காகவும் அழுவதை விட்டுவிட்டு எனக்காக அழுதார்கள். பரிதாபத்துக்கு உரியவர்கள் அவர்கள். எனது துன்பம் இந்தச் சிலுவைப் பயணத்தோடு முடிவு பெற்றுவிடும். ஆனால் அவர்கள் துயரோ அவர்கள் மனந்திரும்பவில்லையெனில் தொடரக்கூடும். அதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. உங்கள் பிள்ளைகளும் புரிந்து கொள்ள மாட்டார்கள். நீங்கள் வாழ்ந்து முடித்தவர்கள். உங்கள் பிள்ளைகள் வாழ போகிறவர்கள். உங்கள் அனுபவம் தந்த பக்குவத்தை அவர்கள் பெறவில்லை. எனவே அவர்களை நினைத்து கோபப்படுவதைவிட் வருத்தப்பட்டு செபியுங்கள்.

செபம் : முதிர் வயதிலும், நரை திரை பருவத்திலும் இறைவா நீர் என்னைக் கைவிடாதேயும். உமது கைவன்மையை இத்தலைமுறைக்கு எடுத்துரைக்கும் வரையிலும், இனிவரும் தலைமுறைகளுக்கு உன் ஆற்றலை நான் கூறும் வரையிலும் என்னைக் கைவிடாதேயும் (சங். 70:18) (தி.பா. 71 : 18)

## இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்

*ஒன்பதாம் நிலை :*

*இயேசு : உங்களைச் சுற்றி நிகழும் எதுவும் உங்களுக்கு பிடிக்கவில்லை . யாரைப் பார்த்தாலும் கோபமும் எரிச்சலும் வருகிறது. இப்படி நடந்துகொள்கிறார்களே! இதெல்லாம் எங்கே போய் முடியப்போகிறது" என அலுத்துக்கொள்கிறீர்கள். "நாங்கள் வாழ்ந்த காலம் எப்படியிருந்தது. காலம் ரொம்ப கெட்டுப்போச்சு. ஒன்றுமே சரியாயில்லை " என பொறுமுகிறீர்கள். உங்கள் வருத்தத்தில் நியாயம் இருக்கலாம். ஆனால் சற்று நிதானமாய் யோசியுங்கள். மாற்றம் என்பது உலகநியதி. சூரியனுக்குக் கீழ் மாறாதது எதுவும் இல்லை . நிலையானதும் எதுவும் இல்லை . ஏன் நீங்களும் கூட மாறித்தான் இருக்கிறீர்கள். உங்கள் வேகம் விவேகத்திற்கு இடம் கொடுத்திருக்கிறது. உங்கள் கோபம் பொறுமைக்கு வழி விட்டிருக்கிறது. இவையெல்லாம் அனுபவங்கள் தந்த பாடம். நீங்கள் அடைந்துள்ள அனுபவத்தை வைத்து மற்றவர்களை எடை போடாதீர்கள். இளமையின் வேகத்தில் அவர்கள் செய்யும் செயல்கள் தவறாக முடியலாம். அவை தடுமாற்றங்கள். தள்ளாடல்கள். அவர்களுக்குத் தேவை அனுசரணை, ஆதரவு, அறிவுரை அனைத்திற்கும் மேலாக அன்புகலந்த அக்கறை. அதை பெரியவர்களாகிய உங்களால்தான் தரமுடியும். என் சிலுவைப்பாதையின் போது நானும் தள்ளாடினேன். மூன்றாம் முறையாய் கீழே விழுந்தேன், எனக்குத் தேவைப்பட்டது ஆதரவான கரங்கள். அவை கிடைக்கவில்லை . என் தந்தையின் ஆதரவு மட்டுமே கிட்டியது. முதிர்ந்த வயதில் உங்கள் பிள்ளைகளுக்கு ஆதரவான கரங்களாக நீங்கள் இருக்கமுடியும். உங்கள் பொறுமை, பரிவு, கனிவு, ஊக்கமூட்டும் சொற்கள் அவர்களுக்குப் பலம் தரும். எழுந்து நடக்க துணிவு தரும். அவர்களை நீங்கள் தாங்குங்கள். உங்களை இறைவன் தாங்கிக்கொள்வார்.*

*செபம் : முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும். என் பலம் குன்றும் நாளில் என்னைக் கைவிடாதேயும். இறைவா! என்னைவிட்டு வகு தொலைவில் போகாதேயும். என் இறைவா! எனக்குத் துணை செய்ய விரைந்து வாரும். (சங். 70:9,12) (தி.பா. 71 : 9, 12)*

## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

பத்தாம் நிலை :

இயேசு : மாதத்தின் முதல் தேதியன்று தின்பண்டங்களும் பொருட்களும் நீங்கள் வாங்கி வந்த காலத்தில் உங்களை மொய்த்துக் கொண்டனர், உங்கள் பிள்ளைகள். பணி ஓய்வு பெற்று, மாலையும் கழுத்துமாக நீங்கள் வீட்டுக்கு வந்த போது உங்கள் பிள்ளைகள் வளர்ந்திருந்தார்கள். உங்கள் பணி ஓய்வின்போது கிடைத்த தொகையின் பெரும்பங்கை அவர்கள் தொழில் பெருக்க, வீடு கட்ட, விருத்தி பண்ண என வாங்கிக் கொண்டார்கள். நீங்களும் மகிழ்ச்சியுடன் கொடுத்தீர்கள் இப்போது உங்களுக்கென்று ஒன்றும் இல்லை. நீங்கள் பென்ஷன் பணம் வாங்கி வரும் தேதியன்று மட்டுமே நீங்கள் மதிக்கப்படுகிறீர்கள் பென்ஷன் வாங்காதவர்களுக்கு அந்த ஒரு நாள் மரியாதையும் கூட இல்லை. நீங்கள் சொத்துக்களாக கருதிய பிள்ளைகள் உங்கள் சொத்துக்கள் மீதுதான் குறியாக உள்ளார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது உங்கள் உள்ளம் குமுறும். இவர்களுக்கா நாம் இவ்வளவு கஷ்டப்பட்டோம். இவர்களுக்கா இத்தனை தியாகங்கள் செய்தோம் என்று வேதனைப்படுவீர்கள். இதே நிலையில்தான் நானும் இருந்தேன், என் சிலுவைப் பாதையின் போது, கொஞ்சம் கூட மனிதாபிமானமே இல்லாது என்னிடம் இருந்த ஒரு மேலாடையையும் கழற்றி என்னை நிர்வாணப்படுத்தி நிர்மூலமாக்கியபோது எனக்கும் ஏறக்குறைய உங்கள் உணர்வுதான் ஏற்பட்டது. என்னை அவர்கள் சிறுமைப்படுத்தியபோது எனக்குப் பெருமை சேர்க்கும் தந்தையின் திருவுளத்தை நினைத்தேன், அனைத்தையும் தாங்கிக் கொண்டேன். உங்களையும் குழந்தைகள் வெறுமைப்படுத்தி, சிறுமைப்படுத்தும் போது கடவுளை நோக்குங்கள் கவலையை இறக்குங்கள்.

செபம் : ஆண்டவரே! என்னைக் காப்பவர் நீரே! எனக்குப் பெருமை தருவபர் நீரே! நான் தலை நிமிரத் துணை செய்பவர் நீரே கடவுளை நோக்கி கூக்குரலிட்டேன். தமது புனித மலையிலிருந்து என் குரலுக்குச் செவி சாய்த்தார்! (சங். 3:3,4) (தி.பா. 3:3,4)

பதினோராம் நிலை :

இயேசு : "வயசான காலத்தில் அதென்ன ஊர்வம்பு? பேசாமல் வீட்டில் இருக்க வேண்டியது தானே! தேவையா இந்த வேலை. உதவி செய்யலேன்னாலும் உபத்திரமாவது செய்யாமல் இருக்கலாம் அல்லவா? அதையும் இதையும் எடுத்து கீழே போட்டு உடைப்பதே வேலையாப் போச்சு. கேட்டா எடுத்துத் தரமாட்டோம்! வயசாச்சுன்னா ஓரமா உக்காந்துக்கனும்" இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் உங்களுக்கு பழக்கமாகிப் போயிருக்கும். யாரிடமும் பேசக்கூடாது. சுதந்திரமாக எங்கும் செல்லக்கூடாது, எதையும் செய்யக்கூடாது என ஆயிரம் கட்டுப்பாடுகள். உங்கள் படுக்கைதான் உங்கள் உலகம். அதைவிட்டு எழுந்து நடப்பதே அத்துமீறிய செயல் போன்ற ஒரு நிலை. "வயதானால் பார்வை மங்கும். செவிப்புலன் மங்கும். அதற்காக மனித உணர்வே அற்றுப்போகுமா என்ன? வெறும் ஜடமாக இருக்க முடியுமா?" என பொறுமுகிற உங்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. நான் சிலுவையில் அறையப்பட்டபோது எனக்கும் இதே நிலைதான். குணம் பெற வேண்டிய ஒருவன் மீது கைகளை நீட்ட ஆசைப்பட்டேன். முடியவில்லை . ஆறுதல் தேடிய ஒருவனை நோக்கிச் செல்ல ஆசைப்பட்டேன். முடியவில்லை. என் கைகளையும், கால்களையும் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். சிலுவை என்னும் அந்தச் சிறு சட்டத்தில் என்னை விட்டார்கள். ஆனால் அந்தச் சிலுவையில் அறையப்பட்டவனாகவே நான் மிகப்பெரும் புதுமையைச் செய்தேன். புதுமைகளிலெல்லாம் மேலான புதுமையாகிய மீட்பை பெற்றுத்தந்தேன். நீங்களும் உங்கள் படுக்கையில் இருந்த வண்ணமே அளப்பெறும் நன்மைகளைச் செய்யமுடியும். உங்கள் ஜெபத்தால் பலரை மீட்க முடியும்.

செபம் : ஆண்டவரே! உம்மிடம் நான் அடைக்கலம் புகுகிறேன். எந்நாளும் நான் ஏமாற்றம் அடையவிடாதேயும். கோட்டை அரணாயிருந்து என்னை மீட்டருளும், ஏனெனில் எனக்குக் கற்பாறையாகவும் அரணாகவும் இருக்கின்றீர். (சங்.70:1,3)(தி.பா. 71:1,3)

## இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

### பன்னிரெண்டாம் நிலை :

**இயேசு :** *வாழ்க்கையின் இறுதிப் பருவத்தை ஏறக்குறைய எட்டிவிட்டீர்கள். இந்தப் பருவத்தில் இதுவரை நடந்தவைகளையும், இப்போது நடப்பவைகளையும் நினைத்து மனம் கசந்துபோக வேண்டாம். உங்கள் உடல் உழைப்பால், பலத்தால், பணத்தால் நீங்கள் இனி யாருக்கும் பயன்படமுடியாமல் போகலாம். ஆனால் உங்களால் இன்னும் ஒன்று முடியும். சிலுவையில் தொங்கிய அந்த மூன்று மணி நேரம் முழுவதும் என் கவலைகள் என்னைப் பற்றியோ, என் காயங்கள் பற்றியோ, என் உடலைப் பற்றியோ இல்லை. மாறாக அந்த மூன்று மணி நேரமும் என் மனத்தில் இருந்தது ஆன்ம தாகம். நல்ல கள்வனை மீட்க வேண்டியது, என்னைப் பழித்துக் கொன்ற மக்களுக்காக மன்னிப்பு வேண்டுவது, என் தாயை உங்களுக்கு விட்டுச் செல்வது, தந்தையின் கரங்களில் என் ஆவியை ஒப்படைப்பது என மேலான காரியங்களை பற்றியே என் கவலைகள் அமைந்தன. அவை ஜெபமாக மாறின. இறுதியில் "தந்தையே! உம் கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" என அர்ப்பணமாக மாறின. வாழ்வின் இறுதிப் பருவத்தில் இருக்கும் நீங்கள் இனி உங்களைப் பற்றிய சிந்தனையைத் தவிர்த்து மற்றவர்களுக்காக, குறிப்பாக உங்கள் குழந்தைகளுக்காக மன்றாடுங்கள், மன்னிப்பு வேண்டுங்கள். எஞ்சிய நாட்களை இறைவனோடு ஜெபத்தில் கழியுங்கள். அதன்பின் எல்லாம் நிறைவேறிற்று" என பெருமூச்சு விடலாம்.*

**செபம் :** *ஆண்டவரே! என் மேல் இரக்கமாயிரும். என் கண்கள் வருத்தத்தால் பலவீனமடைகின்றன. என் உயிரும், உடலும் அப்படியே வருத்தத்திலேயே என் வாழ்நாள் கடந்து செல்கின்றது. (சங். 30:9,10) (தி.பா. 31 : 9, 10)*

## அன்னையின் மடியில் இயேசுவை கிடத்துகிறார்கள்

### பதின்மூன்றாம் நிலை :

**இயேசு :** *வாய்விட்டு அழவும் மனம் விட்டு பேசவும் நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் யாரிடமும் உங்கள் சோகத்தைச் சொல்லியழ முடியாது. நாம் பெற்ற பிள்ளைகளை நாமே விட்டுக்கொடுத்து பேசுவதா என யாரிடமும் சொல்லாமல் மனதுக்குள்ளேயே புழுங்கிக் கொள்கிறீர்கள். இவர்களுக்கு என்ன குறை வைத்தோம்! உடல் கொடுத்தோம், உயிர் கொடுத்தோம். கல்வி கொடுத்தோம். வாழ்க்கையைக் கொடுத்தோம். நமக்கேன் இந்த நிலை. நம்மை ஏன் இவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று அடுக்கடுக்காய் கேள்விகள் எழும். ஆனால் யாரிடமும் சொல்லமுடியாமல் உள்ளுக்குள்ளேயே வெந்துபோவீர்கள். என் சிலுவைப் பாதையின் இறுதியில் என் அன்னைக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. "என்ன செய்தோம் இந்தத் துயரை அனுபவிக்க? இறைமகனையே இந்த உலகுக்குக் கொடுத்தோம். "ஆகட்டும்" என்று சொன்ன வார்த்தைக்காக அத்தனை துயரையும் ஏற்றுக்கொண்டோம். மகனுக்கு முப்பது வயதான போது, பொது வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுத்தோம். இப்போது அந்த மகனை உருக்குலைத்து, உயிரைப் பறித்து மடியில் கிடத்திவிட்டார்களே" என மனம் அழுதது. ஆனால் என் அன்னை யாரையும் கோபித்துக் கொள்ளவில்லை. இந்த மனிதர்கள் நன்றியுள்ளவர்களாய் இருப்பார்கள். இவர்கள் போற்றுவார்கள் என்று எதிர்பார்த்தா அவர்கள் "ஆகட்டும்" என்றார்கள்? இறைவனின் சித்தம் "ஆகட்டும்" என்றுதானே. நீங்களும் கூட பிள்ளைகள் பின் நாட்களில் பார்த்துக்கொள்வார்கள் என்பதற்காகவா அவர்களைப் பாசத்துடன் வளர்த்தீர்கள்? இல்லையே. பாசத்தால் தானே! உங்கள் பாசத்தைப் பிள்ளைகள் உதாசீனப்படுத்தியிருக்கலாம். இறைவன் நச்சயம் பரிசளிப்பார். எனது மரண வேளையில் என் அன்னையின் துணை, பலம் தந்தது. உங்களோடும் அவள் இருப்பாள். எனவே செபியுங்கள்.*

**செபம் :** *அர்ச்சிஷ்ட மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்!*

## இயேசுவின் உடலை அடக்கம் செய்கிறார்கள்

**பதினான்காம் நிலை :**

**இயேசு :** உங்கள் சொந்த இல்லங்களில் இருந்து புறக்கணிக்கப்பட்டு, உங்கள் இறுதிக்காலத்தை, சிலர் முதியோர் இல்லத்தில் கழிக்கக்கூடும். இன்னும் சிலர் சொந்த வீட்டிலேயே எதுவுமே , எவருமே சொந்தமில்லாதது போல் வாழக்கூடும். "எப்படியெல்லாம் வாழ்ந்தோம். கடைசியில் இப்படியாகிவிட்டதே நிம்மதியாய் படுத்துறங்க நமக்கென்று ஒரு இடம் கூட இல்லையே!" என்று கலங்கிப்போய் விட்டீர்களா? என்னைக் கொஞ்சம் பாருங்கள். எனக்கும் இந்த உலகம் தந்த கதி இதுதான். மனுமகனுக்கும் தலைசாய்க்க இடமில்லை . இரவல் கல்லறையில் என் இருத்தல் இரண்டே நாட்கள்தான். மூன்றாம் நாள் விண்ணகத்தோர், மண்ணகத்தோர் யாவரும் மண்டியிட நான் அரியணை ஏறுவேன். விண்ணக ஆட்சியில் அரசுரிமை பெறுவேன். எங்கே இறக்கிறோம், எப்படி இறக்கிறோம், எத்தனை பேர் வந்தனர், எத்தனை மாலைகள் விழுந்தன, சுற்றம் சூழ்ந்திருந்ததா இல்லையா, இவையெல்லாம் முக்கியம் இல்லை. இறந்தபின் எங்கே போகப்போகிறோம். அங்கே நமக்கோர் இடம் உண்டா? என்பது தான் முக்கியம். அதற்கு எப்படி இறந்தோம் என்பதை விட எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம். நம் வாழ்வின் நாட்களைச் சற்று அசைபோடுவோம். கடமைகளைச் செவ்வனே செய்து கனிவுடன் வாழ்ந்த நாட்களுக்காகக் கடவுளைப் போற்றுவோம். தவறிய தருணங்களுக்காக இங்கேயே பரிகரித்து விடுவோம். இந்த முதுமையின் துன்பங்களை புறக்கணிப்புகளை, காயங்களை, வலிகளை, வேதனைகளை நம் பாவங்களுக்காகவும், பிறர் பாவங்களுக்காகவும் பரிகாரமாய் ஒப்புக்கொடுப்போம். நல் மரணம் அடைந்து நற்கதி பெற ஜெபத்தில் நாட்களைக் கழிப்போம்.

**செபம் :** ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே. நான் விரும்புவதும் ஒன்றே. ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும். நானோ வாழ்வோர் நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக் காண்பேன் என நம்புகிறேன் (சங்.26:4,13)(தி.பா. 27 : 4, 13)